**வகுப்பு : 6-ம் வகுப்பு**

**பாடம் : தமிழ்**

**இயல் - 5**

**கவிதைப்பேழை**

**ஆசாரக்கோவை**

**I. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இவர் பிறந்த ஊர் கயத்தூர். ஆசாரக்கோவை என்பதற்கு நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு என்பது பொருள். இந்நூல் பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது.

நல்லொழுக்கமே நல்ல மனிதர்களை உருவாக்கும் . நாம் ஒழுக்க நெறிகளை அறிந்தால்தான் அவற்றைப் பின்பற்றி நல்வாழ்வு வாழ முடியும். இந்த நோக்கத்திற்காகவே நம் முன்னோர் அற நூல்களைப் படைத்தனர்.

**வினாக்கள்:**

1. நல்ல மனிதர்களை உருவாக்குவது எது?
2. நல்வாழ்வு வாழும் நோக்கத்திற்கு நம் முன்னோர் எதை படைத்தனர்?
3. பெருவாயின் முள்ளியார் பிறந்த ஊர் எது?
4. ஆசாரக்கோவை என்பதன் பொருள் யாது?
5. ஆசாரக்கோவை __________ நூல்களுள் ஒன்று, __________ வெண்பாக்களைக் கொண்டது.

**விடைகள்:**

1. நல்லொழுக்கமே நல்ல மனிதர்களை உருவாக்கும்.
2. நல்வாழ்வு வாழும் நோக்கத்திற்காகவே நம் முன்னோர் அற நூல்களைப் படைத்தனர்.
3. பெருவாயின் முள்ளியார் பிறந்த ஊர் கயத்தூர்.
4. ஆசாரக்கோவை என்பதற்கு நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு என்பது பொருள்.
5. ஆசாரக்கோவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நூறு வெண்பாக்களைக் கொண்டது.

**II. பத்தியைப் படித்து சுருக்கி எழுதுக.**

பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல் பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக்கொள்ளுதல்; இனிய சொற்களைப் பேசுதல்; எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்; கல்வி அறிவு பெறுதல்; எல்லோரையும் சமமாகப் பேணுதல்; அறிவுடையவராய் இருத்தல்; நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் ஆகிய எட்டும் நல்லொழுக்கத்தை விதைக்கும் விதைகள் ஆகும்.

**விடை**

**தலைப்பு: ஆசாரக்கோவை**

பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல், தீமைகளைப் பொறுத்தல், இனிமையாக பேசுதல், துன்பம் பிறர்க்குச் செய்யாதிருத்தல், கல்வி அறிவு பெறுதல், சமமாக பேணுதல், அறிவுடையவராக, நற்பண்புகள் உடையவரிடம் நட்புக் கொள்ளுதல் ஆகியவை நல்லொழுக்கத்தின் விதைகள் ஆகும்.

**III. குறுவினா**

1. **எந்த உயிருக்கும் செய்யக் கூடாதது எது?**

   எந்த உயிருக்கும் செய்யக் கூடாதது துன்பம்

2. **நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்**

   நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல்.

**IV. சிறுவினா**

1. **ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?**

ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள்:

- பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்,
- பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக்கொள்ளுதல்.
- இனிய சொற்களைப் பேசுதல்.
- எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்.
- கல்வி அறிவு பெறுதல்
- எல்லோரையும் சமமாகப் பேணுதல்
- அறிவுடையவராய் இருத்தல்.
- நற்பண்புகள் உடையவரோடு நட்புக்கொள்ளுதல்

## கவிதைப்பேழை
## கண்மணியே கண்ணுறங்கு

**I. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடி உலகம் புகழ வந்தாயோ! தங்கப் பூ பதித்த தந்தத்தால் ஆன தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த சேரநாட்டின் முத்தேனோ! இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் சோழ நாட்டின் முக்கனியோ! குளம் வெட்டி, அணை கட்டிக் குடிமக்களின் பசியயைப் போக்கும் பாண்டி நாட்டின் முத்தமிழோ! கண்ணே கண்மணியே கண்மூடி உறங்குவாயாக!

**வினாக்கள்:**

1. தாய் தன் குழந்தையை எவ்வாறு உலகம் புகழ வந்தாய் என பாடுகிறாள்?
2. எதனால்ஆன தொட்டில்?
3. சோழ நாட்டின் பெருமை யாது?
4. அறுசுவை விரித்து எழுதுக.
5. குடிமக்களின் பசியைப் போக்கும் நாடு எது?

**விடைகள்**

1. தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடி உலகம் புகழ வந்தாயோ! எனப் பாடுகிறாள்.
2. தங்கப் பூ பதித்த தந்தத்தால் ஆன தொட்டில்.
3. இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிப்பது.
4. இனிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு.
5. குடிமக்களின் பசியைப் போக்கும் நாடு பாண்டி நாடு.

**II. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று. தால் என்பதற்கு நாக்கு என்று பொருள். நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு (தால் + ஆட்டு) என்று பெயர்பெற்றது. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல் தாலாட்டு.

**வினாக்கள்:**

1. தால் என்பதன் பொருள் யாது?
2. எது வாய்மொழி இலக்கியம்?
3. தாலாட்டு என்றால் என்ன?
4. ஓசையுடன் பாடும் தாலாட்டு எதற்காக பாடப்படுகிறது?
5. தாலாட்டு - பிரித்து எழுதுக?

**விடைகள்:**

1. தால் என்பதற்கு நாக்கு என்று பொருள்.
2. தாலாட்டு வாய்மொழி இலக்கியங்களுள் ஒன்று.
3. நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு என்று பெயர்பெற்றது.
4. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் இனிய ஓசையுடன் பாடும் பாடல் தாலாட்டு.
5. தால் + ஆட்டு.

**II. குறுவினா**

**1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?**

இப்பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள்:

- சேரநாடு
- சோழநாடு
- பாண்டியநாடு என்பன.

**2. நமது வீட்டிற்க்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப் புறப் பாடல் கூறுக.**

நமது வீட்டிற்க்கு வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளித்து உபசரிக்கும் முறையை நாட்டுப் புறப்பாடல் கூறுகிறது.

**IV. சிறுவினா**

**1. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?**

- தமிழ்சோலையில் பூ எடுத்து இசையுடன் பாடி உலகம் புகழ வந்தாயோ!

- தந்தத்தினால் தொட்டில் கட்டி, அதில் தங்கத்தில் பூப் பதித்துச் செல்லமாய் வந்து பிறந்த சேரநாட்டு முத்தேனோ!
- வீட்டிற்கு வந்தவரை, இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் சோழநாட்டின் முக்கனியோ!
- குளம் வெட்டி, அணை கட்டிக் குடிமக்களின் பசியைப் போக்கும் பாண்டியநாட்டின் முத்தமிழோ!

என்று எல்லாம் தாய் தன் குழந்தையைப் பாராட்டுகிறாள்.

**V. தொகைச் சொற்களை விரித்து எழுதுக**

1. **முத்தேன்** - கொம்புத்தேன், மலைத்தேன், கொசுத்தேன்
2. **முக்கனி** - மா, பலா, வாழை
3. **முத்தமிழ்** - இயல், இசை, நாடகம்
4. **அறுசுவை** - இனிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு
5. **ஐந்திலக்கணம்** - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
6. **மூவேந்தர்** - சேர, சோழ, பாண்டியன்.

## உரைநடை உலகம்
## தமிழர் பெருவிழா

**I. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

பொங்கலுக்கு அடுத்தநாள் மாட்டுப்பொங்கல். மாடுகள் உழவர்களின் செல்வமாக மதிக்கப்படுகின்றன. மாடு என்ற சொல்லுக்குச் செல்வம் என்னும் பொருளும் உண்டு. உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மாட்டுப் பொங்கலன்று மாடுகளை நீராட்டுவர். கொம்புகளைச் சீவி வண்ணங்கள் தீட்டுவர். மாடுகளின் கழுத்திலே மணிகளைக் கட்டுவர். பூவும் தழையும் சூட்டுவர். மாட்டுக்கு மஞ்சள், குங்குமம் இடுவர். பொங்கல், தேங்காய், பழங்கள், வெற்றிலை பாக்கு போன்றவற்றைப் படைத்தது வழிபடுவர். மாட்டுப்பொங்கல் நாளிலோ சில ஊர்களில் மஞ்சுவிரட்டு நடைபெறும். மஞ்சுவிரட்டு என்பது மாடுகளை அடக்கித் தவழும் வீர விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல் என்றும் அழைக்கப்படுகிறது.

**வினாக்கள்**:

1. உழவர்கள் எதை செல்வமாக மதிக்கின்றனர்.
2. எதற்காக உழவர்கள் மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கின்றனர்?
3. மாட்டுப்பொங்கல் எப்போது கொண்டாடப்படுகிறது?
4. மஞ்சு விரட்டு என்பது யாது?
5. மஞ்சு விரட்டை வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

**விடைகள்**:

1. மாடுகள் உழவர்களின் செல்வமாக மதிக்கப்படுகின்றன.
2. உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.
3. பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல்
4. மஞ்சுவிரட்டு என்பது மாடுகளை அடக்கித் தவழும் வீர விளையாட்டு ஆகும்.

.

5. மஞ்சு விரட்டு மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல் என்றும் அழைக்கப்படுகிறது.

**II. பத்தியைப் படித்து சுருக்கி எழுதுக.**

இயற்கையோடு இணைந்து வாழ்வதே தமிழரின் வாழ்க்கைமுறை ஆகும். இயற்கையை வணங்குதல் தமிழர் மரபு. தமிழர் கொண்டாடும் பல விழாக்கள் இயற்கைப் போற்றும் வகையிலேயே அமைந்து இருக்கின்றன. அவற்றுள் சிறப்பானது பொங்கல் விழா ஆகும். இது தமிழர் திருநாள் என்றும் போற்றப்படுகிறது.

கதிரவனுக்கு நன்றி கூறிச் சிறப்புச் செய்யும் விழா பொங்கல் விழா. உழவர்கள் ஆடித்திங்களில் விதைப்பர். தைத்திங்களின் முதல் நாளில் பொங்கலிட்டு வழிபடுவர். எனவே, இத்திருவிழாவை அறுவடைத் திருவிழா என்றும் அழைப்பர். அந்தச் சமயத்தில் இயற்கை அன்னை பசுமையான ஆடை உடுத்தி, பல நிறப் பூக்களைச் சூடி இருப்பாள். காயும் கனியும் கரும்பும் எங்குப் பார்த்தாலும் விளைந்து காட்சி தரும்.

உழவர்கள் இயற்கைக்கும் தம்முடன் உழைத்த கால்நடைகளுக்கும் இந்நாளில் நன்றி தெரிவித்து மகிழ்கின்றனர். எனவே இவ்விழாவை உழவர் திருநாள் என்றும் கூறுவர். பொங்கல் திருநாள் இரண்டு நாள்கள் முதல் நான்கு

நாள்கள் வரை கொண்டாடப்படுகிறது இது வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபடுகிறது.

**விடைகள்.**

**தலைப்பு: பொங்கல் திருவிழா**

இயற்கையோடு இணைந்து வாழ்வதும் வணங்குவதும் தமிழரின் மரபு. தமிழர் கொண்டாடும் விழாக்கள் இயற்கைப் போற்றும் வகையிலேயே அமைந்தது பொங்கல்விழா. இதுவே தமிழர் திருவிழா, அறுவடைத் திருவிழா என்றும் அழைப்பர். உழவர்கள் ஆடித்திங்களின் விதைத்து தைத்திங்களில் அறுவடை செய்து முதல் நாளில் பொங்கலிட்டு வழிபடுவர். பொங்கல் திருநாள் நான்கு நாட்கள் கொண்டாடப்படுகிறது.

**III. குறுவினா**

1. **போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?**

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பது ஆன்றோர் மொழி. வீட்டில் உள்ள பயனற்ற பொருள்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்யும் நாள் போகித் திருநாள். இது மார்கழி மாதத்தின் இறுதி நாள் ஆகும்.

2. **உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றன?**

உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

**IV. சிறுவினா**

1. **காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றன?**

- மாட்டுப்பொங்கலுக்கு அடுத்தநாள் காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது.
- உற்றார் உறவினர் மற்றும் நண்பர் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர்.
- குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைப் போக்குவர்.
- பட்டிமன்றங்கள், கலைநிகழ்ச்சிகள் முதலிவற்றை நடத்துவர்.
- விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டுவர்.

## விரிவானம் (துணைப்பாடம்)
## மனம் கவரும் மாமல்லபுரம்

**I. சிறுவினா;**

1. **மாமல்லபுரம் எப்படி உருவானது? அதற்குக் காரணமான நிகழ்வு யாது?**

பல்லவநாட்டு மன்னன் மகேந்திரவர்மனின் மகன் நரசிம்மவர்மன் சிறுவனாக இருந்த போது ஒருநாள் அவர் தன் தந்தையுடன் இந்தக் கடற்கறைக்கு வந்தார். இந்தப் பாறையின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தார். அந்தப் பாறையின் நிழல் யானைப் போல் தரையில் விழுந்தது. அதைதன் தந்தையிடம் காட்டினார். அவர் தந்தை, ' ஆம், நரசிம்மா ! இது யானை போலத்தான் தெரிகிறது. அதோ அந்தக் குன்றின் நிழலைப்பார். கோவில் போலத் தெரிகிறது' என்றார். ' ஆமாம் அப்பா ! அந்தக் குன்றைக் கோவிலாகவும், இந்தக் குன்றைக் கோவில் முன் நிற்கும் யானை போலவும் மாற்றிவிட்டால் நன்றாக இருக்குமே' என்றார் இதுவே மாமல்லபுரம் உருவாவதற்க்கு காரணமான நிகழ்வு ஆகும்.

2. **மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தபசுப் பாறையின் உள்ள சிற்பங்களைப் பற்றி எழுது?**

ஒருவர் கண்களை மூடி, இரு கைகளையும் உயர்த்தி , வணங்குவதுபோல ஒரு சிற்பம் உள்ளது. அவரது உடல் மெலிந்து, எலும்புகளும் நரம்புகளும் வெளியே தெரிவது போல அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது." இதுதான் அர்ச்சுனன் தவம் செய்யும் காட்சி. இந்தச் சிற்பம் உள்ளதால்தான், இப்பாறைக்கு' அர்ச்சுனன் தபசு' என்று பெயர். இதனைப் ' பகீரதன் தவம்' என்றும் கூறுவர். இந்த இடத்தில் இரண்டு பாறைகளுக்கு இடையில் நீர் வடிந்து வந்த தடம் தெரியும். ஆகாயகங்கை பூமிக்கு வருவது போல அமைக்கப்பட்டு உள்ளது. மழைக்காலத்தில் இதன் வழியாக மழைநீர் பாய்ந்து வரும். அப்போது உண்மையிலேயே கங்கை ஓடி வருவதைப் போல இருக்கும்".

இந்தப் பாறையில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் போன்ற சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. இவை உயிருள்ளவற்றை நேரில் பார்ப்பது போல அழகாக உள்ளன இவற்றுக்குப் புடைப்புச் சிற்பங்கள் என்று பெயர்.

## கற்கண்டு (இலக்கணம்)

**1. மயங்கொலி எழுத்துகள் யாவை?**

ண, ன, ந

ல, ழ, ள

ர, ற - ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

**2. ண, ன, ந ஆகிய எழுத்துகள் பிறக்கும் முறையைக் கூறுக.**

ண- நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் ணகரம் பிறக்கிறது.

ன- நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் னகரம் பிறக்கிறது.

ந- நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் நகரம் பிறக்கிறது.

## வாழ்வியல்

## திருக்குறள்

**1. மனப்பாடத் திருக்குறள்.**

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து**

மோந்து பார்த்தால் அனிச்ச மலர் வாடிவிடும். நம் முகம் மாறினாலே விருந்தினர் உள்ளம் வாடிவிடும்.

**வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளது அனையது உயர்வு**

தண்ணீரின் உயரத்துக்கு ஏற்ப நீர்ப்பூக்கள் வளரும். ஊக்கக்கதின் அளவுக்கு ஏற்ப மனிதர்கள் உயர்வார்கள்.

**சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க**
**சொல்லில் பயன்இலாச் சொல்.**

பயனுடைய சொற்களை மட்டுமே பேசுக. பயன் இல்லாத சொற்களைப் பேசாமல் விட்டு விடுக.